# ஸ்மார்ட் சிட்டி நிறுவனத்திற்கு விருது

**சென்னை, நவ. 8–**

சென்னை, 'ஸ்மார்ட் சிட்டி' நிறுவனத்திற்கு, 'சமூகத்தில் நிலையான நகரங்களுக்கான, மாற்றங்களை விரைவுபடுத்துவதற்கான விருது' வழங்கப்பட்டுள்ளது.

புதுடில்லியில், நேற்று முன்தினம், 'கவர்னன்ஸ் நவ்' நிறுவனத்தின் சார்பில், 2019ம் ஆண்டிற்கான, 'மின்னணு மாற்றத்திற்கான விருது'கள் வழங்கப்பட்டன. இதில், சென்னை மாநகராட்சிக்கு, 'சமூகத்தில் நிலையான நகரங்களுக்கான, மாற்றத்தை விரைவுபடுத்துவதற்கான விருது' வழங்கப்பட்டு உள்ளது.

இது குறித்து, மாநகராட்சி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

மாநகராட்சியில் கடந்தாண்டு, 'நம்ம சென்னை' செயலி அறிமுகப்படுத்தப்பட்ட பின், பிறப்பு, இறப்பு உள்ளிட்ட சான்றிதழ்களை, பொதுமக்கள் எளிதில் பெற முடிகிறது.

சீர்மிகு சென்னை திட்டத்தில், 25 பள்ளிகளில், 'ஸ்மார்ட்' வகுப்புகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

மாநகராட்சிக்கு சொந்தமான, 662 கட்டடங்களில், 'சோலார்' மின்சார தகடுகள் பொருத்தப்பட்டு, ஆண்டிற்கு, 3 கோடி ரூபாய் அளவிற்கு, மின் கட்டணத்தை சேமிக்க முடிகிறது.

இது போல், பல துறைகளில், மாநகராட்சியும், 'ஸ்மார்ட் சிட்டி' நிறுவனமும் இணைந்து, சிறப்பாக பணியாற்றியதற்காக, இவ்விருது வழங்கப்பட்டு உள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.